உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

௨ புத்தகம். சஞ்சிகை ௰௩] ௲௮௱௪௨ ௵ ஆடி. ௭, தேயதி வியாழக்கிழமை, Thursday, July, 7, 1842 {Vol II No 13

பாண்டிவளநாட்டுச் சரித்திரக்குறிப்பு

(Historical sketch of the Pandian kingdom)

Continued from page 137

மதுரை இராசாக்களுடைய சரித்திரத்தில் மேற்படி மதுரை இராஜ்யமானது போய்விட்ட பிறகு, கெடுதலையான துரைத்தனம் வந்து சேரிட்டதென்று சொல்லியிருக்குதேயொழிய அந்தக் கெடுதலையான துரைத்தனம் இத்தனை காலமிருந்ததென்று சொல்லியிருக்கவில்லை அந்தக் கெட்ட துரைத்தனக்காலம் போய்விட்டவுடனே ஒரு வேசிக்கும் ஒரு பிராமணனுக்கும் பிறந்தவனும் மதுரைக்கடுத்த கோளமேன்கிற ஊரிலே குடித்தனக்காரனும் சந்திரகுலதீபனென்கிற பேரையுடையவனும் இருந்த ஒரு அணிந்தவன் மேற்படி மதுரைச்சிங்காசனத்தைக் கைக்கொண்டான் அவனுக்குப் பிறகு ௰௪ பேர் அதை ஆண்டார்கள் அத்தைக் கடைசியாய் ஆண்டவனுடைய துரைத்தனத்திலேதான் மதுரையானது துலுக்காணருடைய பாளயங்களாலே முதன் முதற் சூழப்பட்டது இப்படிச் சூழ்ந்துகொண்டது இதற்கு முன்னடந்த காரியங்களையெல்லாம் வந்த இந்தக் காலத்திலே நடந்ததென்று ஒரு தோராயப்படுத்திக்கொள்ளத்தக்கதாயிருக்கிறது

௲௨௱௯௩ம் வருடத்தில் அல்லா அதீன் என்கிறவனுடைய துரைத்தனத்திலே துலுக்கர் டக்கண்தேசத்திலே கலகத்தை முதன் முதலாரம்பித்தார்கள் ௲௩௱௰ம் வருடத்திலும், ௰௪ம் வருடத்திலும், கபூர் அல்லது மாலேக்நாயப் என்கிறவன் முதலிலே ஒரு தண்டு கூட்டிக்கொண்டுவந்து இராமேசுரம் வரைக்குஞ் செயித்துக்கொண்டுபோயிருக்கிறபடியினாலே மேற்கூறிய கலகம் இந்தக் கலகந்தானென்று சொல்லப்படலாம் மற்றொரு சாதனமானது இந்தக் காரியம் ௲௩௨௰ம் வருடத்தில் நடந்திருக்கிறதாகக் காண்கிறது இது முசாயித்ஷா என்றவன் ௲௩௭௰ம் வருடத்தில் விசய நகரத்துக்கும் கன்னியா குமரிக்கும் மத்தியிலே இருக்கிற தேசங்களைக் கலாபித்துக்கொண்டு இராமேசுரமட்டும் ஏறிப்போன இந்தக் கடைசிக் கலகத்தையும் முதற் கலகத்தையும் ஒன்றுக்கொன்று போட்டுவிட்டால் இந்த ௲௩௨௰ம் வருஷமே போதுமானமட்டுஞ் சமீபமாயிருக்கிறது. இந்த இரண்டிலே எந்தச் சங்கதியிலேயும் ௰௫ இராசாக்களுக்குச் சொல்லியிருக்கிற மூன்று சதங்களைப் பார்க்கிலுங் குறைந்த காலமே நாம் வைத்துக்கொள்ள வேண்டியது இப்படி வைத்துக்கொள்ளுகிறது அவர்களுடைய இராசரீகங்களுக்கு மிகவுந் தகுமானதாயிருக்கிறது ஏனென்றால் அவர்களுடைய இராசரீகக் காலமுழுமையும் கலகத்துக்கும் கலவரத்துக்கும் இடமாயிருந்தபடியினாலேயும், அந்த இராசாக்கள் இராசாங்கத்தை அபகரித்துக்கொண்டவர்களும், அதிலே துராகிருதமாய் வந்து நுழைந்துகொண்டவர்களுமானபடியினாலேயும், சமாதான துரைத்தனத்திலேயும் சட்டப்பிரகாரம் நடக்கிற துரைத்தனத்திலேயும் வைக்கத்தக்க மதிப்புக் காலத்தைப் பார்க்கிலும் மிகவுங் குறைந்த காலமே இவர்களுக்கு வைக்கவேண்டியது

மேற்சொல்லிய துரைத்தனங்களுடைய இராசரீககாலத்தில் எவ்வளவாவது குறைத்துக்கொள்ளவேண்டியதாயிருந்தாலும் அந்தக் காலத்தை மதுரை அழிந்தவுடனே உண்டான கெட்ட துரைத்தனக் காலத்திலே சரிப்படுத்திக்கொள்ளலாம். இந்தக் கெடுதலையான துரைத்தனம் எத்தனை காலம் நடந்ததோ அது தெரியவில்லை அன்றியும் அந்தத் துரைத்தனத்திலே செலுத்தின அதிகாரத்தினெல்லையானது இவ்வளவென்றெடுத்துக்கொள்ளத் தகுந்ததாயுமிருக்கவில்லை. சோழராசாவானவன் மதுரை இராசாவைத் துரத்திவிட்டு மறுபடியும் அந்த இராசாவுக்குச் சில காலம் மதுரையைப் பொறுத்துக் கொடுத்துவிட்டான் வல்லாள சந்ததியைக் குறித்த சாதனங்களிலே பதினோராம் பன்னிரண்டாஞ் சதங்களிலே அவர்கள் மதுரை இராசாக்களைத் தங்களுக்குப் பகுதிக்கட்டுகிறவர்களாக்கி ஆண்டுகொண்டார்களென்று சொல்லப்படுகிறது ஆகையினாலே அந்தப் பூர்வீகக்குடும்பத்திலே பிறந்த குலன் இராசகுமாரர்கள் மதுரை பிடிபட்டுப்போன பிறகும், மதுரை எரிந்துபோன பிறகும், மதுரை சிங்காசனத்திலே உட்காருகிற வழக்கமுடையவர்களாயிருந்தார்கள். அந்த வழக்கம் எந்தமட்டும் இருந்ததென்றால், இந்த இராசாக்கள் வந்து சண்டை செய்ததினாலேயும் தங்களுடைய தேசத்திலேயிருக்கிற குடிகள் தங்கள் சொற்படி கேளாததினாலேயும் பலவீனப்பட்டுப் போய் ஒரு அதிகாரமுள்ளவன் முளைக்கடித்து ஒரு புது இராசாங்கம் ஏற்படுத்திக்கொண்டதற்கு இவர்கள் இணங்கியிருந்தவரைக்கும் போலக் காண்கிறது, இந்த மதுரை இராசாக்களே மதுரைச் சிங்காசனத்திலிருந்து ஆண்டார்களென்று சொல்லலாம்போலிருக்கிறது (இன்னும் வரும்)

Life of Mohammed.—மகமதுவின் சரித்திரம்

௰௬ அதிகாரம்.

(*The prophet's first warlike attempt unsuccessful—The failure compensated in the second—Account of the battle of the Beder—This victory much boasted of—Difficulties in the division of spoil—Caab, a Jew assassinated at the instance of the prophet*)

மகமது நபி அதிக கோபத்துடன் உத்தண்டமாய்க் கோறிஸ் வங்கிஷத்துடன் யுத்தஞ் செய்தபொழுது, அவ்யுத்தத்தில் அவர் சற்றும் அனுகூல சித்தியடையவில்லை பிறகு கோறிஸ் வங்கிஷத்தைச் சேர்ந்த வர்த்தகர் கூட்டம் சீரியாவிலிருந்து மக்கத்துக்குப் போகிறதை மகமது கேள்விப்பட்டவுடனே தமது சிறிய தகப்பனாகிய அம்சா என்பவரையும் ௩௰ துரகதப்படைகளையும் அவ்விடம் அனுப்பி அவர்களைப் பிடித்தடக்கும்படி சொன்ன வேளையில், இது கருத்தை அந்த வர்த்தகர் கூட்டமறிந்தவுடனே தாங்கள் போர் பொருவதிலுங் குழப்பமில்லாமற் சமாதானத்துடனே மக்கத்துக்குத் திரும்பிவிடுவதே யோக்கியமென்று கண்டு போய்விட்டார்கள்.

மக்கத்திலிருந்து ஏறக்குறைய ௬௰ சனத்துடன் அபூசோபியரின் வங்கிஷத்துக்குக் கீழாகப்போன ஒரு பெரிய வர்த்தகர் கூட்டம் மகமதுவுக்கு விரோதமாகப் பழிவாங்கத் தேடித்தபொழுது நபியினுடைய ஒற்றரிலொருவன் தங்களுடைய ஐசுபரியமுஞ் செய்கைக்கு லெகுவுமுள்ள சத்துருக்கள் தங்கள் கைகளுக்குக் கிட்டவிருக்கிறார்களென்பதை நபிக்கறிவித்தபொழுது அவர்களைத் தொடர்ந்து மகமதுவும் இன்னும் பலரும் போய் அவர்களை மேற்கொள்ளுமுன்னே அவர்கள் மக்கத்திலிருந்த தங்கட்டாங்கள் சகோதரரிடத்தில் ஒரு தூதனையனுப்பிக் கொஞ்சந் திரட்ட படைசனத்தை அதி சீக்கிரம் அனுப்பும்படி கேட்டுக்கொண்டார்கள் அப்பொழுது சனங்களெல்லாரும் இவர்கள் கேட்டுக்கொண்ட கேள்வியைத் தட்டினால் தங்களுடைய வர்த்தகசாமான்களையுந் தங்கள் சாப்பாடு முதலான பண்டதாரத்தங்களையும் இழந்து போக வருமேயென்று கெடிமண்டிப் பயமடைந்ததினால், (௬௱) சனத்தை அனுப்பினார்கள் அப்பொழுது மகமதுவும் அவனும் (௩௱௰௩) இரணவீரர்களில் மிகுதியானவர்களும் ஒட்டகத்திலேறி நின்றார்கள் இவர்களில் (௭௭) பேர் நாடோடிகளும், மிச்சப்பேர் படைத் துணைவர்களுமாயிருந்தார்கள் மகமது தமது உயிரையிழந்தாலும் பாக்கியம் போனாலும், கீர்த்தியழிந்தாலும் யுத்தத்தை நடப்பிக்கிறதற்கெண்ணியுடனே மகமது செபகாத்தனங்களாலே தமது சனங்களைப் பொருக்குத் தைரியப்படுத்திச் சருவ வல்லமையுள்ள ஆண்டவன் அனுக்கிரகத்தினாலே நீங்களே வெற்றியை அடைவீர்களென்றார் ஆண்டவனுத்தரசையினாலே தனக்குச் செயானுகூலசித்திகிடைக்குமென்பதை நிச்சயித்த துறந்திப்பசிலும் மனித ஒத்தாசையையும் அவர் தேடாமல் விட்டுவிட்டதேயில்லை பிறகு மகமது தமது சேனைகள் பதுவிருக்கும்படி ஒரு கீழறையையும், அவர்கள் தண்ணீர் குடிக்கும்படி அக்கீழறைக்குக் கீழே ஒரு நதியையுமுண்டுபண்ணிச் சேனைகளுக்களித்தார் உடனே சத்துருக்கள் மலையிலிருந்து தாழவிறங்கினவுடனே மகமது சொன்னது. "ஆ, ஆண்டவனே! உமது சனமாகிய இவர்கள் அழிந்துபோனால் உம்மையார் பூமியிலே தொழுதுகொள்ளுவார்கள். என் பிள்ளைகளே, தைரியங்கொண்டு

உங்கள் அத்திரங்களைச் செலுத்துங்கள் ஏனென்றால் நான் உங்களுடையதாயிருக்கின்றது ”

அவரவர் புறத்துக்குச் சேர்ந்த தானைகள் யுத்தத்துக்காரம்பிக்கிறதற்கு முன்மே ஆலி, ஆலகெறேத் (Al Hareth) அமசா (Hamza) என்று சொல்லப்பட்ட மூன்று போர் வீரர்கள் மகமது நபியின் புறத்துக்கும், கோறிஸவங்கிஷத்தில மூன்று போர் வீரர்கள மற்றப் புறத்துக்குமாக நின்று யுத்தஞ்செய்தவேளையில நபி பக்கத்தாரே வெற்றிகொண்டார்கள யுத்தமாரம்பித்தவேளையில மகமது நபியும் ஆபுவிக்கரும் ஒரு விதமான சிங்காசனத்திலேறி நின்று காபிரியேல தூதன முதலான ௩௲ தேவதூதர்கள் வந்து தங்களுக்கொத்தாசை செய்யும்படி பராபரனிடத்தில் கேட்டார்கள் ஆனாலும நபியினுடைய சேனைகள் சற்றே தளம்பாறினபொழுது அவர் தானேறிநின்ற சிங்காசனத்தைவிட்டிறங்கி ஒரு குதிரைமேலேறி ஒரு பிடிமண்ணையள்ளி வானத்திலேறிந்து சத்துருக்களின்பயந்து விழுந்தவுடனே கோறிஸவங்கிஷத்தார சத்துருக்களுக்கு காறுமறபறந்தோடி முதுகுகாட்டினார்கள் அப்படி ஓடிப்போயும அவர்களில அதிகந் தைரிய வீர பராக்கிரமமுள்ள (௭௰) போர்ககளத்தில மாண்டுபோனார்கள் வேறெழுபதுபேரை மறியற்காரராகப பிடித்துக்கொண்டார்கள். மகமதுநபி பக்கத்தாரில ஆகப பதினாலுபேர மாத்திரங் கொல்லப்பட்டுப்போனார்கள் உடனே மகமது பக்கத்தார செத்துக்கிடந்த தங்கள் சத்துராதிகளுடைய தோலகளையுரித்துச் சொல்லக்கூடாத கொடுமையாயக்கிணறறிலெறிந்துவிட்டார்கள் பிறகு அதிக பாரபபட்ட குற்றமுள்ள மறியற்காரரிலிருவரைக்கொன்று மிச்சப்பேரிடத்தில (௪௲) வெள்ளிக்காசை வாங்கிக்கொண்டு அவைகளைப் போகவிடலாமென்ற கட்டளை நிருபித்தலுண்டாயிற்று. கோறிஸவங்கிஷத்தார் தோற்றோடினும அவர்கள் தங்கள் பரிவாரங்களுடனே பத்திரமாய மக்கத்திற போயச்சேர்ந்தார்கள். இவர்களிடத்திலிருந்து மகமது நபி பக்கத்தார அநீதமாயப பறித்துக்கொண்ட உடைமைகள் மிகுதியானதினால அவைகளைப பிரிவுபண்ணிக்கொள்ளுகிறதிலே ஒரு பெரிய குழப்படியுண்டாயிற்று ஏனென்றால மகமது நபிக்குதவிசெய்யவந்த அன்சார (Ansars) என்ற இருபக்கத்திலுமுள்ளவர்கள மிகுதியானவர்களாயிருந்தபடியால் தங்களுக்குத்தானே அவவுடைமைகளில மிகுதியான பங்கு வரவேண்டுமென்று வழக்காடினார்கள மகமதுமத முதல விசுவாசிகளாயிருந்த முகோஜீறினஸ (Mohajerins) என்றவர்களுந தங்களுக்குக் கனகூறு கிடையாதுபோனாலும எல்லாருக்கும போலச் சரியான பங்காகுதல தங்களுக்குங் கிடைக்கவேண்டுமென்று வாதாடினார்கள. மகமதுநபி இதைத் தடுக்கும்படியெண்ணி ஓர் விதமாரீசமபண்ணினாா எப்படியெனில பறிபொருள முதலானவைகளை ஐந்தாகப்பிரித்து அவைகளிலொன்றையெடுத்து யாசகருக்கும தருமச் செய்கைகளுக்குமென்று வைத்துக்கொண்டு நாலு பங்கையுமெடுத்து எல்லாருக்குஞ் சரிவரப் பகிரும்படிக்கு வானத்திலிருந்து தமக்குக் கட்டளை நிருபித்தலொன்று அனுப்பப்பட்டதென்று சொன்னார் அவையாவன, கொள்ளையெடுத்த உடைமைகளைப்பற்றி அவர்களுமிடத்தில (மகமதுவிடத்தில) கேட்பார்கள் அதற்கு மறுமொழியாக நீர சொல்லவேண்டியதென்னவெனில, கொள்ளையுடைமைகள் அனைத்தும ஆண்டவனுக்கும நபிக்கும் உடைத்தானது ஆகையினாலே பராபரனுக்குப் பயந்து உங்களண்டுவே யூராசிப்பட்டு ஒவ்வொரு காரியத்தையுஞ் சரிப்படுத்திக்கொளளுங்கள். நீங்கள் சத்திய விசுவாசிகளாயிருந்தால பராபரனுக்கும அவருடைய நபிக்குங் கீழமையுங்கள் நீங்களபோவாகுதல கொள்ளைபபொருளைச் சமபாதிக்கும்பொழுது அதில ஐந்திலொருபங்கைப பராபரனுக்கும, நபிக்கும, அவருடைய இனசனத்துக்கும தாயதகப்பனற்ற எளியவர்களுக்கும, யாசகருக்கும, வழிச்செலவாளருக்குங் கொடுத்துவிடுங்கள மகமதுநபி இதைச் சொலலித் தன பட்சத்துக்கெடுத்து வைத்துக்கொண்ட உடைமைகளோ அநேகமாயிரம வெள்ளிக்காசுக்கு விலைமதிக்கத் தக்கதாயிருந்தது ஆகிலும, யாசகருக்கும, தாய தகப்பனற்ற எளியவர்களுக்கும அவரெவவளவு எடுத்துவைத்தாரென்பதை நாங்கள் சரித்திரத்தைக்கொண்டறிய ஏதுவாயிருக்கவில்லை

யுத்தம நடந்ததைபபற்றி மகமதுநபி சொல்லுகிறதென்னவெனில ஒன்றையொன்று எதிரித்த இரண்டுதானைகளைபபற்றியுங்களுக்கு முன்னே காட்டப்பட்டது அதிலொன்று பராபரனுடைய சத்திய மதத்துக்காக அற்புதமாயப போர்பொருதது. மற்றது நிரீசுரர்களாக விருந்தபடியால அவிசுவாசிகளுக்காகப போர் பொருத அவர்கள் விசுவாசிகளைத் தங்கள் சொந்தக்கண்ணுக்கு முன்பாக இருமடங்கதிகமாய நிற்கக்கண்டார்கள் ஏனென்றால, பராபரன் தமக்குப பிரியமானவர்களைத் தமதொத்தாசையினாலே பலப்படுத்துகிறார். இப்படியே மகமது மதத்தார் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக இருமடங்காகக் காணப்பட்டதைவிட வேறுமிரண்டு அற்புதங்களிவவேளையில நடந்தன அவைகளிலொன்றென்னவாகில மகமது கைநிறைய அள்ளி ஆகாசத்திலெறிந்த மணலகளைச சத்துருக்கள் முகத்துக்கு விரோதமாகப பராபரனுடைய பெலன அதிக கெதியுடனே கொண்டுபோனதினாலச் சத்துருக்கள் பயந்து கெடிமண்டிப பின்காட்டியோடினார்கள் வீடாவிலே கொல்லப்பட்ட சனங்களைக்கொன்றவர்கள் நீங்களல்ல பராபரனே அவர்களைக்கொன்றார் ஆ! மகமதுநபியே மண்ணைக் கைநிறைய அள்ளி ஆகாசத்திலெறிந்தவரும நீரல்ல ஆண்டவனே அதைச்செய்தார் மற்ற அற்புதமென்னவெனில மகமதுநபி முதன்முறை யுத்தஞ்செய்தபொழுது பராபரன் நபிக்குதவியாக (௲) தேவதூதர்களை வரவிடுத்தாரென்றும, பிறகு (௩௲) தூதர்களை வரவிடுத்தாரென்றும, இந்தப பரலோக வாசியான துணைப்படைவர்கள் அனைவரும கறுப்பும வெள்ளையுமான குதிரைகளிலேறிவந்து துணைசெய்தார்களென்றும, அப்போது காயாசம் (Hiazum) என்றகுதிரையிலேறிவந்த காபிரியேல தூதன தானே மேறகூறிய யுத்தகலகங்களை அதிக வீர தைரியத்துடனே முடித்தாரென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது இதைப்பற்றி மகமதுநபி சொல்லுகிறதென்னவெனில, நீங்கள் கொஞ்சப்பேராயிருந்தபோதுதானும, வீதாரிலே ஆண்டவனுங்களுக்குச் செயானுகூலத்தை யளித்தார ஆகையினாலே நீங்கள் நன்றியறிந்தவர்களாயிருக்கும்படிக்குப பராபரனுக்குப பயப்படுங்கள். மெய்யாகவே நீங்கள தொடாந்தோச்சியாய நின்றுபராபரனுக்கஞ்சினீர்களேயானால, உங்கள் சத்துருக்கள் உங்களுக்கு விரோதமாகவந்தாலும, ஆண்டவன (௫௲) தூதர்களைக்கொண்டுங்களுக்குதவிசெய்விப்பார

காயாப் (Caab) என்ற ஓர் யூதனை மகமதுநபி கொல்லுவித்ததினால அவருடைய பழிவாங்குதலின் குணமின்னதென்றறிந்து கொள்ளலாம. எப்படியெனில வெகுகாலமாக நபியினுடைய எண்ணத்துக்கு மிகவும வேறுகூறிய நடந்துகொண்ட காயாப் என்ற ஓர் யூதன வீதாவில நடந்த யுத்தத்திலிருந்து மக்கத்துக்குப்போயப பிறகு மதினாவுக்குப்போயப பட்டணத்தில மதிலகளுக்குளளிருக்கிற சனங்களுக்குத் தனது புலமைகளை வாசித்துக்கொண்டிருந்துபிறகு சதிமோசனையாயக் கொல்லப்பட்டான.

கூட்டேன்பவர் செய்த பிரபஞ்சநூல்

[Abridgement of Good's Book of Nature.]

இரண்டாம்பிரிவு.-௩ம் அதிகாரம். மனிதசாதியின் விசேடலட்சணங்கள் ௱௰ம். பக்கத்தினின்று.

௮வது ஆபிரிக்கா அல்லது கறுப்புவனனத்தார் பிங்கல நிறந்தொடங்கிக் கருங் கறுப்பு நிறமட்டுமிருக்கிறார்கள் அவர்களுடைய தலையொடுங்கி முகங் கீழ்ப்பக்கத்திணீண்டு நெற்றி விலவளைவாய்க்கணைகள புறப்பட்டு மூக்குத் தடித்துத் தட்டையாகி உதடுகள் பிரதானமாய மேலுதடு மிகத் தடித்து முரசென்புகள் திரண்டெழும்பி நாடி பதிந்து மயிருங் கறுத்துச் சுருண்டு கூந்தலாகி இருக்கின்றது. காப்பிரிகளுடைய முகவடிவம ஐரோப்பையாருடைய முகவடிவத்தைப போற் சற்றேனுமிராமற் பின்னொரு விகறப முகவடிவத்தினுங் குரங்கு முகவடிவமாய் இருக்கின்றது.

௯வது. ஆஸ்திறேலியா அல்லது பிங்கல வன்னத்தார் மகாக்கோனி மரநிறமுள்ளவர்கள் அவர்களுடைய தலையினமேற் பக்கமொடுங்கி நெற்றி சற்றே விரிந்து மேன்முரசென்பு சற்றே திரண்டெழும்பி மூக்கு அகன்றும உறுப்புடைத்தாகி மயிரும நீண்டு தடித்துச் சுருண்டதாயிருக்கின்றது. இவவிகற்பமானவர்கள் நவலாந்தாவிலே உண்டு. அவர்கள் ஐரோப்பையாருக்கும் ஆபிரிக்கருக்கும நடுநிலையெனத் தோன்றுகின்றது.

௰வது. மனித சாதியை இவவிதமாயப் பகுதியிட்ட சாதாரணப் பிரிவில இரண்டு காரியங்களை நினைத்துக்கொள்ள வேண்டுமகவது. இன்னகுலம இன்னவிதமாயிருக்குமென அறுதியிட்ட லட்சணங்கள் அக்குலத்திலுள்ள ஒவ்வொருவருக்குமமைத்துக்கொள்ளப்போகாது. பிங்கலம அல்லது செப்புவன்னத்தார சுத்தவெள்ளைக்காரருக்குள்ளும உண்டு. ஐரோப்பையாருடைய வடிவம ஆ

ம். அதினுமுசிதமான தோல் கறுப்புவன்னத்தாருக்குள்ளுமுண்டு

௰௧-வது இரண்டாவதாய், சில சாதியார் பிரதானமாய் ஏரோப்பையார் பிரதேசங்களுக்கு வலசை போகின்றமையால், அவர்கள் பூமியின் பல இடங்களிலே பரந்திருக்கவும் அவ்விடத்துள்ள சாதிகளுடன் கலந்திருக்கவும் ஏதுவாகின்றது ஆகவே, வெள்ளைக்காரருக்குள்ளே புகர்வன்னத்தானுடைய அகன்ற கன்னவெலும்புகளையுந் தட்டை முகத்தையும் அல்லது காப்பிரியினுடைய தட்டை மூக்கையுந் தடித்த உதடுகளையுங் காண்பதினும் ஆசியர் ஆபிரிக்கருக்குள்ளே ஏரோப்பையாருடைய வடிவங்கள் தோன்றக்காண்கிறோம்

௰௨-வது சகல சாதியாரையுந் தேவனொரே இரத்தத்தாற் பிறப்பித்தாரென்று வேதஞ் சொல்லுகின்றது. சகலரும் ஒரே மனுச் சோடியினின்று தோன்றினார்கள் தங்களை விஞ்ஞானசிரியரெனப் பேர்கட்டிக்கொண்டிவ்வித கருத்திற்கொத்திசையாத சிலருமுண்டு முக்கிய சிருட்டிப்பையன்றிமனிதன் பூமியிற்றோற்றினானெனக் காரண நாட்டும்படி இவர்கள் பல வழியாலும் பிரயாசப்பட்டார்கள்

௰௩-வது. தாவின் என்னும் விஞ்ஞானசிரியர் மனுஷர் சிப்பியிற்றோற்றினார்களென்றெண்ணுகிறார் இக் கருத்து நாம் சிந்திக்கவுந் தகாத அளவுமட்டையாயிருக்கின்றது வேறு சிலர் அளவையாற் சாதிக்கிறோமெனக்கூறி மனிதசாதி குரங்கு தேறித் திருந்திய நிலையென்று பாணிக்கிறார்கள் ஒறங் அவுற்றங் என்னும் பெரிய சாதிக்குரங்கு மனுசசாதியிற் சேர்ந்ததென்று வின்னியஸ் என்னும் பெரியவர்கூட எண்ணி அதைக் குரங்குக்கும் அசட்டு மனிதருக்கும் இடைநிலைத்தொடையாக நிறுவியிருக்கிறார்

௰௪-வது அளவை நியாயத்தின் கறுவம் இவ்வளவு கல்விமான்களை மயக்கி உன்னதத்திலிருக்குந் தேவனுடைய வாக்கையும் அதிகாரத்தையும் புரட்டுதற்கு முயலப்பண்ணிற்றேயெனச் சிந்திப்பது நமக்கு மிகவுஞ் சஞ்சலமாயிருக்கின்றது கடவுளுடைய ஆலோசனை நிலைநிற்கும். எவ்வளவு ஆழமுஞ் சாதாரணமுமாய அவருடைய பிரமாணங்களைக் கற்கிறோமோ அவ்வளவு தெளிவும் புத்திக்கிசைவுமுள்ளனவாயவை தோன்றும் பிரபஞ்ச நூலையும் வேதாகம நூலையும் மெய்மையைப் பற்றவேண்டுமென்ற பத்தியாவலுடன் தோந்துபார்க்குமிடத்து அவை ஒன்றையொன்று விளக்கி வலியுறுத்துகின்றன.

௰௫-வது. குரங்கினத்தையும் இவ்வித சிந்தைகொண்டு தோந்து பார்த்தால் அஃது மனுச் சாதியோடு சாராதென நாங் காண்போம் மற்றுங் குரங்கினங்களைப் பார்க்கிலும் ஒறங் அவுற்றங் என்னுங் குரங்குக்கு மனிதருடைய எலும்புக்கூடுபோலுங் கங்காளமுண்டு. ஆயினும் அதுவுந் தற்பவமாய விகற்புடைத்தாயிருக்கின்றது மனுஷனுடைய முள்ளந்தண்டிற் பார்க்க ஒறங் அவுற்றங் உடையமுள்ளந்தண்டிற் பொருத்துகள் மூன்று குறைவு மேலும் இமயிருக்கதினால் வாயுப்புரையோடு சார்ந்த ஒருவகைப்பையுண்டு. அது வெள்ளைக்காரர் கறுத்தவர்கள் சிவப்பு வன்னத்தார் எவர்களுக்குமில்லை.

(இன்னும் வரும்)

(The following article is the original of the foregoing)

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

PART II.] *Varieties of the Human Race.* [CHAP. 3

(Continued from page 111)

8. *Fourth*,—the *African* or *black man*, varies from a deep tawny to a perfect jet The head is narrow, the face projecting towards the lower part, the forehead arched, the eyes projecting, the nose thick and flat, the lips particularly the upper one, very thick, the jaws prominent, the chin retracted, the hair black, frizzled and woolly. The countenance of the negro is more unlike the European, and more like the monkey than that of any other variety

9. *Fifth*,—the *Australian* or *tawny man*, is of a mahogany color, the head is narrowed at the upper part, the forehead somewhat expanded, the upper jaw slightly prominent, the nose broad, but distinct, and the hair harsh, coarse, long and curly This variety inhabits New Holland, and seems to form a middle point between the European and the African

10 In this general classification of mankind, two circumstances must be remembered First, the distinctive characters will not apply to every individual of the particular division to which they belong,—swarthy or copper colored persons are often found among the genuine white race and European features, and sometimes even a fair skin are to be met with in the black and tawny tribes

11. In the second place, we must recollect that the frequent migrations among some of the divisions, particularly the Europeans, would cause this race to be widely scattered, and prominently intermixed with the other races in their own particular divisions of the globe Consequently, we are more likely to meet with Asiatics and Africans possessing European features, than to find among the white race the wide cheek-bones and flat face of the *brown man* or the flat nose and thick lips of the negro

12 The Bible informs us that "God hath made of one blood all nations of men"—that all descended from one human pair There have been men, calling themselves philosophers, who were not satisfied with this plain and simple statement. These philosophers have, in various ways, endeavored to account for the appearance of man on earth, without any special creation

13 One philosopher, Darwin, conjectures men sprung from oysters this theory is too absurd to deserve attention Another class of men, pretending to reason, assert that the human race are only an improved edition of monkeys Even the great Linnæus thought the orang outang might belong to the human family, and he places it as the connecting link between monkeys and uncivilized men

14. It is a sad reflection, that the pride of reason should have deceived so many learned men, and made them attempt to subvert the word and authority of the Most High God But his counsels will stand, and the more deeply and generally his laws are studied, the more plain and rational they will appear The books of nature and of revelation mutually explain and enforce each other when examined with a humble and earnest desire after truth.

15 If, in this spirit, we examine the monkey tribe, we shall find that they cannot belong to the same race with man The orang outang has a skeleton more like the human form than any other species of the monkey, but even that is essentially different The vertebræ (little bones of the back) are less by three in the orang outang than in man Then the animal has a peculiar membrane, or pouch, connected with the larynx, or windpipe, which belongs to no division of man whatever, white, red, or black

[To be continued]

நீதிமொழிகள், ௰௩ அதி ௧—௫

ஞானமுள்ள மகன் தகப்பனின் புத்தியைக் கேட்கிறான் சரசக்காரனோ அலட்டுதலைக் கேளான் தன் வாயின் நற்கனியினாலே அவன் நன்மையைப் புசிப்பான், துரோகிகளின் ஆத்துமமோ கொடுமையைப் புசிக்கும். தன் வாயைப் பத்திரம்பண்ணுகிறவன் தன் ஆத்துமத்தைத் தற்காக்கிறான், தன் உதடுகளை அகல விறக்கிறவனுக்கோ கலக்கம் வரும். சோம்பேறியின் ஆத்துமம் இச்சித்தாலும் ஒன்றும் வராது, சாக்கிரதையுள்ளவர்களின் ஆத்துமமோ புஷ்டியாகும் நீதிமான் பொய்ப்பேச்சைப் பகைக்கிறான், ஆகாதவனோ வெட்கமும் இலச்சையுமுண்டாக்கிறான்

கடிதங்கள்.

(Letter from a Missionary lady to native wives and mothers.)

என் அருமையான சகோதரிகளே,

நான் யாழ்ப்பாணத்தைவிட்டு வந்தபிறகு உங்களுக்கொரு காகிதம் விரிவாயெழுதக் காத்திருந்தும் எங்கள் குழந்தை துன்பமாயிருக்கிறதினாலும் எனக்கு ராக்காலங்களில் நித்திரையுமில்லாதபடியினாலும் வேலைகளைச்செய்ய நேரமுமில்லாதபடியினாலும் எழுதாமல் விட்டுவிட்டேன். இப்பொழுது இத்தேசத்தைவிட்டுச் சடுதியாய்ப் போகவேண்டிவந்தபடியால் நான் உங்களைமறந்துவிடவில்லையென்றதை நீங்கள் அறியும்படிக்கு இந்தச் சிறுக காகிதத்தை உங்களுக்கெழுதுகிறேன்.

நீங்கள் யாவரும் நித்திரைகொள்ளும் வேளைகளிலேதானும் அநேகமுறை நான் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் நினைத்து நீங்கள் சலாக்கியராகவும் தேவ அறிவு உங்களுக்குள்ளே நிலைப்படவும் வேண்டுமென்று தேவனைப்பார்த்து மன்றாடிவந்தேன். கிறிஸ்துமார்க்கத்தினால் உங்களுக்குக்கிடைத்த சலாக்கியங்களை நினைத்துப் பாருங்கள். நீங்கள் உங்களிருதயத்தை மெய்யாய்க் கிறிஸ்துவுக்கொப்புவித்து முற்றுமவரைப் பின்பற்றினால் எப்படிப்பட்ட நித்திய திரவியங்களுஞ் சந்தோஷங்களும் உங்களுக்குண்டாயிருக்குமென்று பாருங்கள். இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் உங்களுக்குமாத்திரம் நியமிக்கப்பட்டிருக்கின்றனவோ? அல்ல உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்குமென்றதே வாக்குத்தத்தம்.

முதல் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள் பின் இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படுமென்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார். உங்கள் பிள்ளைகள் ஆண்டவரை நேசிக்கவும் அவருக்குக் கீழ்ப்படியவும் படிப்பிக்கிறதே உங்கள் முதற்கவலையாயிருக்கவேண்டும். இதற்காக நீங்கள் நாடோறுஞ் செபம்பண்ணுகிறதுமன்றி உங்கள் நடக்கையினாலும் புத்திப்போதகங்களாலும் அவர்களைத் தெருட்டவேண்டும். அவர்கள் நல்லவர்களாகவும் பாக்கியசாலிகளாகவும் மற்றுஞ் சனங்களாற் சங்கிக்கப்படுகிறவர்களாயுமிருக்கிறது உங்கள் விருப்பமென்று அவர்களுக்கறிவிக்கவேண்டும். பிள்ளைகளுக்கு உலகப்பொருள்களைத் தேடிவைக்கிறது பெற்றோருக்கு வழக்கம். அதுபோல நீங்களும் உங்கள் நேரங்களையும் உங்கள் வருமானங்களையுஞ் செலுத்திவருகிறது மோசம். இப்படிப்பட்டவர்கள் பராபரனிடத்திற் கொள்ளையாடுகிறார்களென்று வேதஞ் சொல்லுகின்றது. பராபரனுடையவர்களென்று உடம்படிக்கை பண்ணிக்கொண்டவர்களாகிய நீங்கள் பராபரனுடைய வசனங்களைவாசித்துச் செபம்பண்ணவேண்டிய வேளைகளிலும் உங்கள் நன்மைக்காக வைக்கப்படுகிற கூட்டங்களுக்குப் போகவேண்டிய வேளைகளிலும் உலகவேலைகளுக்குட்படுவதும் இப்பாசங்களாற் கட்டப்பட்டிருப்பதுந் தரித்திரருக்குஞ் சுவிசேஷப் பிரபலியத்துக்கு உதவி செய்யாமலிருப்பதும் பராபரனிடத்திற் கொள்ளையாடுகிறதாயிருக்கும். நீங்களிவ்விதமாய் நடப்பீர்களாகில் பராபரன் தமது உடம்படிக்கையிலே நிற்கிறவர்களுக்கென்று நியமித்திருக்கிற ஆசீர்வாதங்களை உங்களைவிட்டெடுப்பார். நீங்களுங்கள் பிள்ளைகளைப் பராபரனுக் கொப்புவித்து அவருக்குப் பயப்படுகிறதற்கேதுவான வழியில் நடத்துவோமென்று வாக்குப்பண்ணியிருக்கிறீர்கள். உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்குஞ் சிநேகிதராகிய அஞ்ஞானிகளை நீங்கள் சிநேகித்தாலுஞ் சங்கித்தாலும் அவர்களுடைய நிலைபரம் பரிதாபப்படத்தக்கதென்று அவர்களுக்காகப் பரிதபிக்கிறதை உங்கள் பிள்ளைகள் காணட்டும். உங்கள் பிள்ளைகளை அஞ்ஞானிகளுடைய பராமரிப்புக்குக் கீழாகவிடாதபடிக்கு எச்சரிப்பாயிருங்கள். அவர்கள் கூத்துப்பார்க்கவாகுதல் சிற்றின்பப் பாட்டுகளையாவது சரித்திரங்களையாவது அஞ்ஞானத்தேவர்களுடைய புராணங்களையாவது கேட்கவும் வாசிக்கவும் இடங்கொடாதிருங்கள். சத்திரப் பூங்காவிலிருந்த ஆதாமேவாளைப்பற்றியும் பொல்லாதவர்களானவர்கள் அழிக்கப்படும்போது கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த நோவாவைப்பற்றியும் பராபரன் சொன்னபடிசெய்து ஆம் தன்னுடைய அருமையான குமாரனாகிய ஈசாக்கைத் தகனப்பலிசெலுத்தச் சம்மதித்த ஆபிரகாமைப்பற்றியும் யோசேப்பைப்பற்றியுஞ் சொல்லிய சரித்திரங்களை எடுத்துச் சொல்லுங்கள். அவர்களொவ்வொரு வார்த்தையையுங் கவனிப்பார்கள். இவ்விதமாக வேதமுற்றிலுமுள்ள சரித்திரங்களையுஞ் சொல்லுங்கள். அவைகள்வரவரப் பதுமையாயும் மெய்யானவைகளாயுமிருக்கும். நான் நடத்திவருகிறமாதிரி இதுதான். காலாகாலங்களில் அவர்கள் வேத சாத்திரங்களைச் சொல்லச்சொல்லிக் கேட்கிறார்கள். இப்படித்தான் தீமோத்தேயுவின் தாயும் பாட்டியாரும் அவனைப்படிப்பித்தது. அதுதான் அவனையப்படிப்பட்ட நல்லவனாக்கிற்று. ௨ தீமோத். ௧ அதி ௫ வசனம் ௩ அதி ௰௫ வசனங்களைப்பாருங்கள். இக்காரியங்களைப் பலமுறையும் உங்களுடனே மாதக்கூட்டங்களிற் பேசினேனும். நீங்களவைகளின் மேன்மையைப்பற்றி அதிகமதிகமாய் உணருவீர்களென்று நம்பியிருக்கிறேன். மறுபடியும் உங்களெல்லாரையும் வந்துகாணுகிறது எனக்குப்பெரிய விருப்பம். கர்த்தருக்குப்பிரியமானால் இரண்டுவருடக்காலத்தில் இத்தேசத்துக்கு வருவோமென்று காத்திருக்கிறோம். இந்தக் கடதாசிக்கொரு மறுமொழியைப் பெற்றுக்கொள்ளுவேனென்று காத்திருக்கச் சமையம்போதாது. நாங்கள் அமெரிக்காவிலிருக்கும்போது உங்கள் காகிதங்களையும் வாசிக்கவிரும்பப்படுவோம். கோப்பமமா காகிதமெழுதினபோது உங்களொவ்வொருவரையும் பற்றிவெவ்வேறுயெழுதினார்கள். உங்கள் சுகசெய்திகளைப்பற்றியும் உங்கள் சிலருக்கினனுங் குழந்தைகள் பராபரனுடைய கிருபையாலே பிறந்ததென்பதைப்பற்றியும் சந்தோஷப்பட்டேன். பிரதானமாய வெக்காசு பெண்சாதி ஒரு குழந்தைக்குத் தாயாயிருக்கிறாள். அவளிந்தக் காகிதத்தை வாசிக்கிறது என்னுடைய விருப்பம். உங்களிற் சிலர் துன்பத்தினால் உபாதிப்பட்டீர்கள். இராகேல் அவ்வளவு வருத்தப்பட்டாளென்பதைக் கேட்டபோது துக்கப்படுகிறேன். அவளுக்கு வருகிற வருத்தங்களொவ்வொன்றும் தேவனிடத்திலிருந்துவந்து, எழும்பு புறப்படு இது உன்னுடையவிடமல்லவென்று சொல்லுகிற தூதனுக்குச் சரியென்று நினைப்பாளாக. எங்கள் பட்சமான பரமபிதாத தமது பிள்ளைகள் தங்களெண்ணங்களை மேலானகாரியங்களிற் செலுத்தும்படிக்குப் பலவிதமாய்ப் படிப்பித்து வருகிறார். சிலவேளைகளில் அவர்களுடைய சிநேகிதரையும் சிலவேளைகளில் அவர்களுடைய திரவியங்களையும் சுகத்தையும் அருமையான பிள்ளைகளையும் எடுத்துக்கொள்ளுகிறார். கர்த்தரெனப்பங்கானவரென்று உண்மையாய்ச் சொல்லுகிறவர்கள் மாத்திரம் நித்திய திரவியத்தையும் சந்தோஷத்தையுங் கொண்டிருக்கிறார்கள். எல்லாருக்கும் நன்மை செய்யுங்கள் பிரதானமாய் விசுவாசத்தின் வீட்டாருக்கு நன்மை செய்யுங்களென்ற வாக்கியத்தை மறவாதிருங்கள். எமிலியாவென்பவளும் இன்னுஞ் சிறு பெண்பிள்ளைகளைப் படிப்பிக்கிறாளென்றதற்காகச் சந்தோஷப்படுகிறேன். யாழ்ப்பாணத்துக்கொரு அச்சடியன் புடைவை அனுப்பவிருக்கிறேன். அதை எமிலியாவெடுத்து நாடோறும்பள்ளிக்கூடத்துக்குவருகிற பெண்பிள்ளைகளுக்கு ஒவ்வொருசட்டை தைக்கத்தக்க அளவு கொடுக்கலாம். அது வரும்போது கோப்பமமா எமிலியாவிடத்திற் கொடுக்கட்டும். உங்களொவ்வொருவருக்குஞ் சொல்லும்படி என்மனதில் அநேககாரியங்களுண்டு. ஆனாலும் இதையெழுதத்தானும் நெடுநாட்சென்றது. ஐயருமிருந்ததில் வருத்தமாயிருக்கிறார். அங்கேயிருந்ததைப்பார்க்க எனக்கிப்போது சுகம் ஆகிலும் மெத்தப் பெலன்கொள்ளவில்லை. உங்களுக்கும் உங்கள் நாயகமாருக்கும் ஐயர் சலாஞ்சொல்லுகிறார். உடம்புக்குச் சவுக்கியமானால் அவரும் அவர்களிற் சிலருக்கெழுதுவார். எங்களைப்பற்றி விசாரிக்கிற உங்கள் அயலகத்தாருக்குஞ் சலாஞ்சொல்லுங்கள். அறிவைக்கொடுக்கிற சமாதானம் இயேசுகிறிஸ்துவினிமித்தம் உங்கள் மனதிலும் இருதயத்திலும் இருப்பதாக. எங்களுக்காகச் செபம்பண்ணுங்கள். உங்களை எங்கள் தினசெபங்களில் நினைப்போம். உங்களையினி உலகத்திலே காணக்கூடுமேயாகில் அதிக சந்தோஷப்படுவோம். அதிலும் அதிகம் மோட்சத்திலே காணக்கூடுமேயானால் ஆண்டவருங்களுடனே இருப்பாராக.

(On Tamil Grammar.)

(Concluded from page 141.)

நடபாதி நட்பப்பொருள் விளக்கஞ்செய்யும் வித்துவாங்கிச சங்கப்பிரபுவாகிய சங்கரநமச்சிவாயப்புலவர் அவர்களுடைய உரை பிழையென்று மறுத்திருப்பதைப்பற்றிய பேசுவது.

கவது. சங்கரநமச்சிவாயப்புலவர் அவர்கள் ஆறனுரு-வே-என்பதற்கு ஆறுமவேற்றுமைக்குறியாகிய அது வுருபு மேற்சொல்லிய எட்டுவேற்றுமையுருபுகளையுமேற்குமென்று சொல்வதைப்பற்றிய பெயரேயன்றி இடைச்சொல்லாகிய உருபு உருபுகளை ஏற்குமென

று சொல்வதெப்படி? அவர் செய்தவுரை சரியன்றென்று மறுக்கிறவர்கள், அவ்வுருபே என்பதற்கு (எழுவாயுருபாம்பொழுதும்பொருண்மையின்றி வடிவிலொருபடியாய் நிற்கும்பெயரென்று பொருள்பண்ணுது) எழுவாயுருபு ஏனையுருபுகளையும் ஏற்கும் எனவும், எழுவாய்வேற்றுமையாவது பெயர்மாத்திரையாய்த் தோன்றிநிற்கு நிலையென்பவாகலின் அவ்வெழுவாய் நின்றவுருபே ஐம்முதலிய ஆறுவேற்றுமைகளினுருபுமேற்கும் எனவும் விளியுருபாவது பெயர்துவிகாரமேயாதலின் அவ்வெழுவாயுருபின் வேறல்ல எனவும் உருபுருபேற்குமென உடன்பட்டு உரைசெய்திருக்கிற கருத்தென்ன? நூலாசிரியர் வடிவில் வேற்றுமையின்மைபற்றிப் பெயரையே அவ்வுருபென்று இலக்கணமாயச் சொல்லியிருப்பதினால் உரையாசிரியரும் அப்படிப் பெயரென்று பொருள்பண்ணுவது விளக்கமென்றறிந்தும் எழுவாயுருபென்று இலக்கணமொழியாய்ப் பொருள்பண்ணினாரெனில் அப்பொழுது ஆறனுருபும் என்னுமிடத்தும் முற்புடைவேற்றுமைப்பொருளோடும்பிற்புடைப்பெயர்ப் பொருளோடும் நிற்கும் அது வென்னு மொழியை ஆறனுருபுமாய் நிற்கும் பெயரென்று சொல்லாமல் ஆறனுருபென்று இலக்கணமாய நூலாசிரியர் கூறினாரென்றும் சங்கரநமச்சிவாயப் புலவரவர்களும் அதுபோல ஆறனுருப்புப்பெயரேற்குமென்பதற்கு வதில ஆறனுருபேற்குமென இலக்கணமாய் உரை கூறினாரென்றும் ஒப்புக்கொள்ளாமல்விட்டதென்ன நியாயம் ஆ! தனக்கோர் நியாயம் பிறர்க்கோர் நியாயமா! ஆனாலும் பூர்த்துப்பாராமல் மோசம்போனார்களோ தெரிந்திலம். சங்கரநமச்சிவாயப்புலவரவர்கள் அது என்னும் மொழி முற்புடைவேற்றுமைப்பொருட்குரித்தாயினும் பிற்புடைப்பெயர்ப்பொருட்குமுரித்தாய் நின்று எட்டு வேற்றுமையுருபுகளையும் ஏற்குமென்பது பூரணமாயறிந்து உரைசெய்தாரன்றி அறியாமல் இடைச்சொல்லாகிய உருபு முருபேற்குமென்று மோசமாய்ச்செய்தாரல்லர் அறிந்தே செய்தாரென்பதற்கு எல்லேயினனுமதுவும் என்னுஞ் சூத்திரவுரையில், ஆருமருபெழுவாயாய் நின்று வினைப்பயனிலைகொண்டது என்று சொல்லியிருப்பதும், ஏற்குமெவ்வகை என்னுஞ் சூத்திரவுரையில் வினை முதலிய மூன்றும் வேற்றுமைகொள்ளாதென்று சொல்லியிருப்பதும், ஆறனுருபுமென்னு மிசசூத்திரவுரையில் தன்னிருகிழமைப்பொருளும்மற்றவ்வுருபின்பொருளுந் தோன்ற என்றுசொல்லியிருப்பதும் அறிந்து செய்தாரென்பதற்கு மெய்ச்சாட்சியாயிருக்கின்றன இவ்விடத்து இருகிழமைப்பொருள், முற்புடை சம்பந்தப்பொருள், பிற்புடை கருத்தா முதலிய பொருள், உருபின்பொருள், முற்புடை இடைச்சொன்மைப்பொருள், பிற்புடை பெயர்ச்சொன்மைப்பொருள், உருபிற்கு முற்புடை ஒருபொருள் பிற்புடை ஒருபொருளில்லை ஆக இடைச்சொன்மைப்பொருளொன்றுமே யுளதெனில், சாத்தனது குடையென்னும்பொழுது சாத்தனாகிய நாமிக்குச் சம்பந்திப்பொருளும் ஓர் சார்பிடமடுத்து நிற்குமியல்பினால் உருபிற்கு இடைச்சொன்மைப்பொருள் ஒன்றுமாத்திரமுள்ளது சரி, ஆனால் சாத்தனது என்னும்பொழுது சாத்தனாகிய நாமிக்குச் சம்பந்திப்பொருளும் அது என்பது சாத்தனுக்குடைய ஓர் வஸ்து உண்மை விளக்குவதினால் அவ்வஸ்துவிற்கு நாமிப்பொருளும் ஓர் சார்பிடமடுத்து நிற்குமியல்பினால் உருபிற்கு முற்புடை இடைச்சொன்மைப்பொருளும் சாத்தனுக்குடைய ஓர் வஸ்துவின்குறியாய் நிற்பதினாற் பிற்புடை பெயர்ச்சொன்மைப்பொருளும், சாத்தனது வந்தது என்னும்பொழுது சாத்தனாகிய நாமிக்குச் சம்பந்திப்பொருளும் அது என்பது விளக்கும் சாத்தனுடையதாகிய வஸ்துவிற்குக் கர்த்துருப்பொருளும் உருபிற்கு ஓர் சார்பிடமடுத்து நிற்பதினால் முற்புடை இடைச்சொன்மைப்பொருளும் சாத்தனுக்குடைய ஓர் வஸ்துவை விளக்குங்குறியாய் நிற்பதினாற் பிற்புடை பெயர்ச்சொன்மைப் பொருளுமுண்டென்பதெல்லாமறிக. இருகிழமைப் பொருளென்பதற்கும் உருபின்பொருளென்பதற்கும் இவ்வாறு பொருள்கொள்ளாமல் ஆறும் வேற்றுமைக்குரிய தற்கிழமைப்பொருள் பிறிதின் கிழமைப்பொருள்களிலொருகிழமைப்பொருளென்றும் ஐம்முதலியவேற்றுமையுருபுகளிலொருருபின் பொருளென்றும் பொருள்பண்ணிச் சிலர் மறுப்பினும் முதற்குறித்த விருசாட்சியும் யாவராலும் மறுத்தற்கரிய பூரண சாட்சிகளாயிருக்கின்றன இவைகளையெல்லாம் மறுதலைப்பக்கத்தவர்கள் ஒருபொழுதும் வாசித்துப்பார்த்திலர் போலும் அல்லது வாசித்துப் பாராது மறந்தனர்போலும் இப்படி அவர் கருத்து முழுவதும் விளங்கச் சூத்திரம்போலத் தானே இன்னுமிலக்கண மொழியாலுரைசெய்திருப்பதைப் பாராமல் ஏற்குமெவ்வகை, என்று சொல்லியிருக்கவும் பெயர்வழி—பே, என்று சொல்லியிருக்கவும் அவைகளை அவர் யோசியாமல் இடைச்சொல்லாகிய உருபு இடைச்சொல்லாகிய உருபை ஏற்குமென்றுரைத்தது மோசமென்று சொல்லியிருக்கிறார்கள், ஆ, அவர் அவ்வளவு யோசனையற்றவரும் இவ்வகைப்பட்ட சூத்திரங்களை விளங்கிக்கொள்ள விவேகம் போதாதவருமாய் இப்படி லேசாயெண்ணவும் பேசவுந்தக்க வித்துவானோ? அவருடைய வுரையினுட்பத்தைக்கண்டு அதிசயித்து மதிக்கும் நிறைகோற்சமான நிதானச்செவ்விய புத்திமான்கள் அப்படி ஒருபொழுதும் எண்ணவும் பேசவும்மாட்டார்கள்

உவது சாத்தனது என்பது குழையது கோட்டது என்பன போலக் குறிப்பு வினையென்று சொல்லி மேலும் பதம் பிரித்து அகரம் சாரியையெனவும் துவ்விகுதியெனவும் வரையறுத்துச் சாத்தனைப் பகுதியென்று வரையறுக்கமாத்திரந் துணியாமல் மவுனமாயவிட்டார்கள், குறிப்புவினையானது பொருண் முதலாறினுந் தோற்றிமுன்னூறனுள் வினை முதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே என்னுஞ் சூத்திரத்தின்படி பொருண்முதலாறினுமூலமாயக் குழை ஊர் என்பனபோலும் பகாப்பதங்களினின்றுந் தோன்றி, குழையன், ஊரன் என்பன போலும் வாய்ப்பாட்டில் வழங்குவதன்றி சாத்தன் புலவன் என்பனபோலும் பகுபதங்களினின்றுந் தோன்றிச் சாத்தனது புலவனது என்பனபோலும் வாய்ப்பாட்டில் வழங்குவதுமுண்டா? அப்படியாகில் குழையனது, ஊரனது, சிரவணனது, சதுமுகனது, கரியனது, கூத்தனது, இவையெல்லாம் குறிப்புவினையாமே, தத்தம் பகாப்பதங்களே பகுதியாகுமென்பதை அவர்கள் மறந்தனர்போலும், அன்றியும் குழையது கோட்டது என்னுங் குறிப்பு வினைகள், குழையையுடையது கோட்டையுடையது எனக்குழையைக் கோட்டை உடைமைப்பொருளாய்க் காட்டுவதுபோலச் சில புலவர்களுடைய குறிப்பு வினையாகிய சாத்தனது என்பது சாத்தனையுடையது எனச் சாத்தனை யுடைமைப்பொருளாய்க் காட்டுகின்றதா? சாத்தனுக்குப் பிறிதொன்றையல்லோ உடைமைப் பொருளாய்க்காட்டி ஆறும்வேற்றுமைப் பொருண்மையினிற்கிறதென்றுணரச்செய்கின்றது.

சுவது சங்கர நமச்சிவாயப் புலவரவர்கள் ஆறும் வேற்றுமையுருபு எட்டு வேற்றுமை யுருபுகளையும் ஏற்குமென்றது உருபுருபேற்குமென்று சொல்லுதலாகிய பிழைபட்டு ஒரு வாற்றானுந் திறமென்று சொல்லப்படாமற் போயவிட வீரமாமுனிவர் ஆறும்வேற்றுமையுருபு ஐம்முதலிய ஆறுவேற்றுமை யுருபுகளையும் மாத்திரமேற்குமென்றது உருபுருபேற்குமென்று சொல்லுதலாகிய பிழைபடாமல் ஒருவாற்றுற்றிறமென்று சொல்லவந்த விசேஷமியாது? எழுவாய் விழி இரண்டையும் விலக்கிக்கொண்ட விசேஷந்தான் ஒருவாற்றுத்திறமென்று சொல்லப்பண்ணிற்றோ அல்லது வேறேது மொருவாறிருந்து பண்ணிற்றோ அறியவிரும்புகின்றனம்

இனி நூலாசிரியர் இலக்கணமாய உருபுருபேற்குமென்று சொன்னதுபோல உரையாசிரியராகிய சங்கர நமச்சிவாயப்புலவர் அவர்களும் உருபுருபேற்குமென இலக்கணமாய உரைசெய்திருப்பதினால் எப்படி உருபுருபேற்குமென்று மலைப்பவர்களுக்கு விளங்கச் செய்யுந் தெளிவுரை வருமாறு

ஆறனுருபு மேற்குமவ்வுருபே, இ. ள். (பொருண்மையினொருவாற்றானும் விகாரமின்றித் தன்னிலையினின்றும் பெயர்களேயன்றி) ஆறும் வேற்றுமைப் பொருட்குரியாய் நிற்கும் அது வுருபும் (பெயர்ப்பொருண்மையோடும் ஏகதேசத்தில்) எழுவாய் முதலிய எட்டுவேற்றுமை யுருபுகளையுமேற்று வழங்கப்படும் என்று

இவ்வுரை தெளிவாயிருப்பதுமன்றி, ஏற்கும்- எனவும், பெயர்வ,- எனவும் சொல்லப்படும் சூத்திரங்களின் கருத்துக்கும் தொல்காப்பியத்தில் பிரிந்து பிரிதேற்றலு மென்னுஞ் சூத்திரக் கருத்துக்கும் அதினுரைச்சாபுகளும் வீரமாமுனிவர் சொன்ன தொன்னூற் சூத்திரக்கருத்தின் சாபுகளும் சங்கர நமச்சிவாயப்புலவர் அவர்களுடைய வுரைக்கும் சாத்தனது சாத்தனதனை என்பன முதலிய இலக்கிய வழக்கிற்கும் இயைபுமாயிருப்பதறிக

சமபூரணம

யாழ்ப்பாணம் சுண்டிக்குழி இலந்தை நகரில்
இல்லையம்பலவாணர் சுவாமிநாதன்

(Answer to the inquiry—who is the god of the Vellalas?)

கடவுடுணை

மங்கலம்பொலிதரும்விங்கிலிசதிபாதந்
திங்களங்குடைநிழற்ங்குமம்புவியெல்லாம்
உதயதாரகைப் பிரபை வீசுமுத்தமப்பிரபுகளே,

உதயதாரகை உம் புத்தகம், யஉஞ. சஞ்சிகையில் சந்தேக நிவாரணப்பிரியன் காரத்திகதிரித்தம்பி வினவிய வினவிற்கு விடை

வாய்மொழிபேசிவாதுகள்புரியி
னாய்வறவீணர்களுழறுவரதனாற்
சங்கைகடவிரவேசதுரொடுமிபபோழ்
தங்கைகொணலவிமினருங்கனியெனவே
முந்தைநாலுதாரணம் விந்தையாயப் பற்பல
எநதைபீசனையெனசிந்தையிலிருத்தி
எடுத்துககூட்டி அடுத்துககோட்டித்
தொடுத்துநாட்டி விடுத்துககாட்டி
அறிவறிவித்துச் செறிவுறுவித்துக்
குறிபெறுவித்து நெறியுறுவிப்பன்
வாருமின்சாருமினேருமின்பாருமின்
உள்ளுமினறெள்ளுமினகொள்ளுமினவள்ளிதாய்
நவைதவவவைகவவவை நவமிவையே.

சாதிமரபு

ஆனநான்முகன்முகத்திலந்தணர்மரபுண்டாகத்
தோளினிலரசாவற்கந் தோனறிடத் தொடைகடம்மின்
மீளவும் வணிகர் தங்கள்மெய்க்குலமுதிககத்துய்ய
தாளிணையதனில்வேளாஞ்சாதியுமுதித்தனரே

இது வேளாளரைப் பிரமாவின் பாதத்திற்றோற்றினவர்களென்றும், நாலாவதாய்த் தோற்றினதினால நாலாஞ் சாதியாரெனறும் படிப்பிக்கின்றது.

தொலகாப்பியம் பொருளதிகாரம் முதலாவது அகத்திணையியல், உகூஞ் சூத்திரம்

அவற்றுள் ஒதலுந்தூதுமுயர்ந்தோராமேன்—இதன் பொருள்—அமமூனறினுள் ஒதற்பிரிவும தூதிற் பிரிவும் அந்தணர்முதலியமூவரிடத்தனவெனறவாறு—மூவரையுமுயாந்தோரெனக்கூறவினவேளாளரை ஒழிநதோரெனறுணர்கவெனச் சொலலியிருக்கின்றது

இது அந்தணர் முதலிய மூவரையுமேற்குலத்தோரென்றும் வேதமோதுதற்குரியரெனறும வேளாளா அவாககுக் கீழகுலத்தோரெனறும் வேதமோதுதற்குரியரலலரெனறுங் காட்டுகினறது

இலக்கணவிளக்கம இவது. பாட்டியல் ௱கூச சூத்திரம்

நாலெகரகமுககோன்மறையே
யாயுங்காலை அந்தணர்க்குரிய

௱கூடு சூத்திரம்

படையுங்குடையுங கொடியுமுரசுந்
நடைநவில புரவியுங்களிறுந்தேருந்
தாருமுடியுந நேர்வனபிறவுந்
தெரிவுறுசெங்கோலரசர்ககுரிய

௱கூகூ சூத்

வைசியன்பெறுமே வாணிகவாழ்க்கை

௱கூஎ சூத் வேளாண்மாந்தர்க்குழுதூணலல-திலையெனமொழிபபிறவகைநிகழச்சி

இவவிடத்து வேளாணமாந்தரெனச் சுயபெரும் உழுதூணெனச் சுயசிவியமும் குறித்துநாலாம் வகுப்பில வைத்து வேளாளா நாலாம வருணத்தவரெனபது பூரணப்படககாட்டியிருககிறா.

கவித்துறை பாட்டியல உஉ.

காலையனசந்திரனிந்திரனகணடன காவலர்க்கு
மாலையன்சேயரனகணடனமாமறையோாககுநிதிக்
காலையன்காலனமைத்தவெழுத்துவணிகருக்கு
வேலையனகணடன வேளாளருககு விலககினவே

இதில், செட்டிகள் மூன்றும வருணம் வேளாளர் நாலாம் வருணமெனறு அவ்வபபெயரினாலும அவவவ வகுபபிலேழும்கினுலுந தெரிகின்றது

உரிச்சொல்

ஒத்ததொழில்செய்வோரயனுருவில்வந்தோர்
முத்தொழிலோாவாணிகா மொயதனத்தோர்வத்தர்
எழினமலரோனபாதத்தில் வந்தோரியலேர்த்
தொழிலுடையோா சூத்திரரேயாம்.

இதினாலும மேற்குறித்திருக்கிறபடி சூத்திரரும நாலாம் வருணத்தாரும வேளாளரெனபது துலக்கம.

சூத்திரரும் நாலாம் வருணத்தாரும் வேளாளரெனபதற்கு இவவளவு திருட்டாந்தங்கள் போதும் இவைகளை அஙகீகரியாது மேவிட்டாரும் பேசத்தொடங்கினால் மேனூல்களிலிருந்து அநேக திட்டாந்தங்களெடுத்துக் காட்டி உண்மையைத் திணமையாய் நாட்டுவோமென்றறிக இப்படிக்கு

யாழ்ப்பாணம் } சகல சற்குணவசியன்
௲அாசஉஆ. ஆனிமீ உஉதி } சத்தியநிாணயசுவாமி.

பத்திராதிபர் குறிப்பு

வேளாள குலத்தவர்களே, உங்களைப் பார்க்கிலுஞ் சற்றும் மேம்பாடாயிராத உங்களுடனொத்த படைப்புகளினும கீழத்தரமான நிலைமைக்கு உங்களைக் கொண்டுவருகிற சைவமதத்தைச் சத்தியமுள்ளதெனறு நம்பிவருகிற நீங்கள் எவவளவு மதிக்குறைவுள்ளவர்களெனறு பாருங்கள நீங்கள பிரமாவுடைய காலிலிருந்து தோற்றினவாகளானபடியால் வேதமோதலுககட்குத் தகுநத காரியமலல ஆனாலும பிரமாவுடைய தொடையிலிருந்து வசியா தோற்றினபடியாலவேதமோத அவர்களுக்குஉத்தரவுண்டு உஙகளுககோ ஒரு தேவன.வசியருககோ வேறொரு தேவன் பிராமணருக்கோ பினனொரு தேவன. யாதொரு திட்டாந்தமுமின்றி இதைஏன நமபுகிறீாகள் அது பாரப் புரளியென்று நீங்கள் நம்பவிலலையா? மறுபோ வேதமோதலுக்குரியவாகளாயிருக்கிறது போல நீங்களும் அபபடியே ஓதுகிறதற்குத் தகுதியினையுடையவர்களெனறு உங்கள் சொந்த இதயந்தானும் உங்களுககுச் சொலலிக் கொடுககவிலலையா? சைவாஓதுகிறவேதமாவதெனன? அதைக் கற்றதினால் ஆராகுதல நயததையடைந்தாாகளா? வேதத்தைப படிபபதினால ஒரு மனிதன புத்தியடைவானோ? அது ஒருவனை நலலவனாக்குமா? அது ஒருவனை மோட்சத்துக்குப் போகபபண்ணுமா? இலலை இலலை, அதிகமதிகமாய வேதத்தை அனுதினமும ஓயாமற் படித்தவாகளைப் பாருங்கள் அவாகள் மறுபேரிலும் புத்திக்காரரோ? அலலது மறுபேரிலும் நயப்பட்டவாகளா? இலலை, இல்லை வேதத்தைப் படித்ததினால அவாகளுககு வநத நலமெனன! அது அவாகளை அகநதைகொள்ளவேபணணிற்று அது மறுபேரை இகழந்து தள்ளவே எண்ணிற்று. தேவனுடைய சத்தியத்திலிருந்து விலகிபபோகப்பண்ணிற்று. அவர்களோ குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருககிறபடியால் இருதிறத்தாருங குழியிலேதானே விழுவாாகள் சத்தியநேசம அவாகளில இலலாதபடியால அவாகள் பொயயையே நமபுகிறாாகள வேதங்களைப படிககிறதற்குத் தகாதவாகளானால பிராமணருடைய பாதங்களை முத்தமிட்டுப் பகலின வெளிச்சத்தைக் காணுகிறதற்குத் தலையை நிமிாத்திப பாராமல நகாநதுகொணடிருக்கும புழுவுககுச் சரியாயிருககிறதெனன! உதயதாரகை சொலவதைககவனித்து, உஙகளைச சிறையாககிககொள்ளுகிறதறகு விருமபுகிற மனிதர் கட்டிய பாரப்புரளியை விட்டுத் திருமபிச் சகலருக்கும அறிவிக்கப்படும பராபரனுடைய வாாத்தையைக கேளுஙகள ஒரு பிதாத்தன பிள்ளைகளில இரஙகுகிறதுபோல ஆணடவனும் தமக்கஞ்சுகிறவர்களுககு இரஙகுகிறா கெட்ட விககிரகங்களை விட்டுத் திருமபுங்கள், தபபறையான வேதங்களைவிட்டுவிடுஙகள ஏகசத்திய பராபரன கொடுத்த வேதாகமததை ஏற்றுககொணடு அவரையே வணஙகிச் சேவியுஙகள்.

(Answer to an inquiry on the true Religion)

சகலத்தையும் படைத்துக காக்கும் ஆதியை ஏதொரு ஒபபுவமையனறித் தொழுவோர்க்கு அவனுடைய கிருபையுணடாகடடும

உதயதாரகையே,
வெள்ளி பேசினாற் கல்லும் பேசும்
கலலும் பேசினாற் கணணும பேசும்

உனது உம புத்தகம் யஞ சஞ்சிகை ௱சயம் பக்கத்தில் இருள் நிறைந்த யாழப்பாணநகா உலைகலலெனற அவிசுவாசியின அஞ்ஞான வினவுககு விடை

ஆணடவன பிதாமாதா மனைவி மக்கள் பிறப்பிறப்பு துவக்கங்கடைசியுள்ளவனெனறும ஒரு புத்திரனைத் தாயவயிற்றில மனுவாயப் பிறப்பித்திறப்பிததானெனறும, நமபும் அஞ்ஞானத்தை அறவே விட்டகறறி ஏதொரு இணையுங கணடிபபுமிலலாமல எஙகும நிறைநத ஒருமையான சோதியே நமமைப்படைத்தாதரிக்கு

தமபிரானென்று விசுவசித்து உள்ளபடி வணங்குதற்கு நற்போதகஞ் சொல்லுவதெந்த வேதமோ அந்த வேதந்தான் கடவுடந்த வேதமெனக் கண்டுகொள்ளவேண்டியதுமனறி மோட்ச பதிக்கா சைவைத்தோாகளத்தை நம்பி அதின்படி நடபபவாகளே நலவிடஞ் சேர்வார்களொழிய மற்றும்படி கத்தாவைக்குறித்து உணர்ந்து இவ்விதமென்றறியக்கூடாமல் தங்கள் சித்தத்திற் தோற்றினாற் போலப பன்மையிற் பொருள் வீணைத்து மனப் பொறுமையினால வீணிலேயில் நிற்பவாகள் சில மிலேச்சரை மருட்டித் தங்கள் நிலையிலாக்கும்படி மிகுந்த துலைதூரங்களிலிருந்து வந்து எண்ணறுப் பணத்தைச் செலவழித்தும் பிரயாசித்தும வெகு சாமார்த்தியங்களாய்த் தங்கள் அஞ்ஞானத்தைப் போதிவித்தாலும் அவர்களும் அத்தைப பினபற்றிய ஏழைகளுந் நரகாக்கினியில அமிழந்து போகக கூடிய பாதையே ஒழியக கத்தாவுக்குவாந மாாககமெனறத்தை எபபடி நமபககூடும

ஆகையாலெனது நேசத்தாரகையே மேற்சொல்லிய எங்கும் நிறைந்து கண்டிப்பு மிணையுமிலலாத சோதியை ஒருவனெனத்திடனாய் விசுவாசிக்குமபடி போதிவிக்குங் கடவுடந்தவேதமெந்த வேதமென விளக்கமாய்ப் பேர்தொகுத்து இந்தக் கருத்துடனே அறிவிக்கத் தயவுசெய்வாயாக

திருந்தரத்தினககலனுக்குமுன்னே
கருங்கலலைச் செப்பனிட்டாலுமொப்பாகுமோ?

இப்படிக்கு உனது தோழன் திவவியநகர் கண்ணுழி.

பத்திராதிபர் குறிப்பு.

தாரகையை வாசிப்பவர்களனைவர்க்கும் பரிபூரணசமாதானமுண்டாகக்கடவது

நீவிரனைவருமமைதியுடனித்தை யூன்றிச் சிந்திக்கவேண்டுமென்று உதயதாரகை உஙகளைக் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுகின்றது சத்தியமதம் யாதெனச் சுத்தகுணமுள்ளவாகளே தோந்துரைககட்டும இது தேவனுடைய ஆவியினாலனறி மனிதனுடைய வாக்கால ரூபிக்கப்படுவதிலலை முதன முதல நியாயசாட்சி தோன்றட்டும். பின, மனிதரைத விசுவாசித்து அதற்கஞ்சி அதற்கமைந்து நடககடடும் ஆனாலும, "திவவிய நகர் கண்ணுழி" எனறவரோ சத்தியவழி தமமிடத்துணடெனச் சொலலுகிறா சொலலியும அது ஏதென்று நமககுக காடடவிலலை சத்தியவழி யலலாதது ஏதெனறு மாத்திரஞ் சொலலுகிறா இது வெளிப்படையலலவே மேலும தாம நிறுத்தினதற் காதாரமாகத் தமது சொலலேயனறிப் பிறா சாட்சிகாட்டவில்லையே பின்னை நாம் அவா சொலலுக்குடம்படலாமா? அவர் பூசியுஞ் சற்குணருமென்றெங்களுக்கெப்படித் தோனறும? பூசியுஞ சற்குணமு முள்ளவர்கள் தானும் அத்தாட்சியினறி யாதொனறை வரையறவு பணணமாட்டாாகளே. முதல வெளிச்சந் தோனறட்டும் பிறகு நாம பாதையைக் காணபோம ஆ, ஆ! நான விடயங்களைக் காண்கிறேனெனறு குருடன் கூவெனபதினாலாவதெனன? அவனை நமக்கு வழிகாட்டியாயக கொளவோமா? இதுவே நற்சமயம மனிதர் சகலவற்றையுமாராய்ச்சிபணண வாரமபமபண்ணியிருககிறாகள் விககிரக வணககம வீணுங் கேடுமாமென்பது தெளிவாயிருக்கின்றது குருக்கள் பிராமணா முதலானவாகளினால நமககியாதொரு நயமினறெனபதுந் துலாமபரமாயிருககினறது அவாகளைய மகற்றி விட்டுவிடுவோம பின்னை, சத்தியவழியாது? இது ஏழைகளுங கற்றறிநது இரட்சண்ணியமடைதறகுபயோகமாயிருககவேணடியதே இபபால "திவவிய நகா கணணுளி" எனபவா நமதறிவை விளக்கி உணமையை ஊட்டுமத்தாடசிகளைக் கொட்டினாலனறி மற்றுமபடி யவா சொலவதை நாம நலலதெனறெடுககச சற்றெனகிலுமிடமிலலை.

(On Dreaming)

உதயதாரகையென்னும பத்திரிகையை நடாத்தும் மகா கனம பொருநதிய ழீ ழீ மைனாத்துரையவர்களே,

தஙகள் பத்திரிகையின் கண கனவைப்பற்றி விரிக்கப்பட்ட கடாவும்விடையுமோ யாவர்க்கு முபயோகமுள்ளதாயிருககினறன ஆயினுங் கனம்பொருந்திய ழீ ழீ. கனுவியாாத்திப்பிரியன தம்பாபிள்ளை அவாகளெடுத்துககாட்டிய "உடலறிவிளக்கச் செயயுள்களோ" கனவைபபற்றிய வினவுக்கு விடையாயிருக்குமென் றெணணவேண்டும அச்செயயுள்களின கருத்தோ யாவரு மெளிதினறியககூடியதலல அதையறியவேண்டுமெனற விருப்பம எனககதிகமாயிருககினறது. "எல்லாமறிந்தவரும் ஏதுமறியாதவருமில்லை" என வாசகியமிருத்தலால் ஆராகுதல் இதன் கருத்தை அறிந்திருக்கவுங் கூடும் வணணைநகர் வினயகமூர்த்தி எனபவர், கனுவியார்த்திப் பிரியனெழுதியது, அவவினாவிற்கு ஒரேபங்கின் விடையென்றும மற்றதைத் தானெழுதுவோமெனறும வரைந்ததால இவரிடத்திலிச் செயயுள்களின பொருளையும் அவவினாவுக்குச் சரியான விடையையுமறிந்து கொளளலாமென்று மிகவும் அக்களிப்பாயிருக்கிறேன் வினயகமூர்த்தி இச்செய்யுள்களின பொருளை அறியாதிருந்தால ஒரு பங்குககுமது விடையாயிருக்குமென்றறியககூடாது. அவரறிந்திருபபாாஅதை அவர் எனக்குத் தயவாயறிவிக்கவேணடும் இதுவுமனறி

வினாக்கள்

நாம் சிறிதுவேளை நித்திரையாயிருக்கிறபோது கண்ட கனாககளினபடி சிறிதுகாரியங்கள் சம்பவிக்கிறதெனன? சிலர் நிததிரையாயிருக்கிறபோது எழும்பி அங்கே இஙகே போய் வநது படுத்து விடியற்புறந் தாம் படுத்திருநததேயனறி வேறியாதொன்று மிலலையென்று சொல்லவும அபபடிககொத்தவர்களெழும்பிப் போகிறபோது யாம கேட்கிறதுக்கு மறுமொழிசொல்லியும அதையுமவர்கள் மறககவேணடியதெனன அப்பொழுதவாகள் உயிரெங்கே? இன்னுஞ் சிலா நித்திரையிலதிகமாய் அத்தையும இத்தையும பேசுவதெனன? சிலா சுபாபமாய் நடக்குமபோது நித்திரையாயிருந்தும் விழுந்துபோகாமலும வேறு மோசமாயக் கிணறு பள்ளஙகளில விழாமலும போவதற்குக் காரணமென்ன?

சிறிதுவேளை நாமொருக்காலுங் காணாத இடத்தைக் கனவிற்கணடதைப போய்பபாாத்தால நாம கனாககண்டபோது தோற்றினதுபோற் சரியாய் இருபபதை யானிரணடுமுறை கண்டேனிபபடியிருப்பதேது?

நித்திரையாயிருககிற போது நாம் சுவாபமாயிருக்கும்போது காணககூடாத கேளவிக்கு விடையைக கனவிற்கணடுகொள்வதெனன? இவவினாக்களுககெலலாமிடையினத்துக கினமுண்டெனறு மிலலையெனறுங தற்கிபபதுபோலத் தற்கியாமலும நீதிபபிரியன் வினவிய பத்துவினாககளுககும் விடையெழுதாமல வெலவிதங்களுக்கெனறுண்மைப் புலவர்களோடு வீணுயபொரும வீணர்போலிதற்கு விடையெழுதாமலும நித்திரையாய் வேறு காரியங்களை எழுதாமலும நலவிடையை அறிவிகக மன்றுடுகிறேன.

இப்படிககு
இடையினத்துக்கினமுணடெனபோா சி கா

(On the quality of a Poetic Verse)

நுண்பிழையாய்வைத் திண்பிழையாக்கல்

உதயதாரகை உம புத்தகம் யகஞ் சஞ்சிகை ாகஉம் பக்கத்திலே சுணடிககுழியிற் கிச்சியாமபிள்ளை மொண்டான எழுதிய கடிதத்திற சில பல பிழைகளிருககினறன என்னவெனில,

கவது, "விசாகபபெருமானையராற் செய்யப்பட்ட வருங்குன்ற என்னுங் கட்டளைககவித்துறை" எனப் புகலறா அது அவரால் செயயபபடடதலலவே.

உவது "கவிபபாவாயிருப்பதின் காரணத்தை" என் நவின்றார் இதில ஐயுருபுக்கு முடிககுஞ் சொல்லெஙகே?

ஙவது "கறறுவலல புலவரிடத்தில" எனச் சாற்றினார் இதன் பொருண் முடிபேது-தோாந்து எனபதா?

சவது "எங்களுககறிவிகக மனறுடுகிறோம" எனக்கூறினர் மனறுடடககாரா பலராயிருகக ஒருவா கையொபபம்வைத்தது சரியலல இறசகுவேஸது எழுதப பயின்றவர்களிடம இத்தை விசாரிபபாராக

இபபடிப்பட்டவர், உடுபபிட்டி வயித்தியலிங்கர் விளங்காய் என்றதைக் கூவிளஙகாய என வோரெழுத்துப பிழையெழுதினதற்காக, மனுடா சகலர்க்கும மறவியுளதெனவோராது அவவறிவாளியிடம் எவன நூலைக்கொண்டபபடி எழுதினீர் என வினவினது புத்தியலல தன குறறம்பாரான பிறர்குறறம பார்பபதெனறோ.

யாதொருகாரணமினறி இவரில நானிப்படிக குற்றஙகாட்டியதேனெனறு ஒருவரு மாசசரியபபடத் தேவையிலலை இவரிலெனககியாதொரு கோபதாபமுமிலலை இவரை நானறிந்ததுமிலலை பினனை ஈானிதை எழுதன நியாயமென்னவெனறுல இவரும உதயதாரகைக்குக கடிதஙகளை எழுதுகிற பிறரும விழிபபாயிருந்து இனிமேல் இயறறமிழில இப்படிப்பட்ட பிழைகள் எழுதாதபடிககு ஒரெச்சரிப்பாயித்தை எழுதினேன. இயற்றமிழ வாசகம் எழுதுவது மிகப்பிரதானம இப்படிககு,

ஐஅாசஉம ஆடி ஆனிமீ சுந் தீ. ஒருவன்.

௪ம் அதிகாரம்

அறன்வலியுறுத்தல் —*The power of Virtue*

௩௪. மனத்துக்கண் மாசிலனாத லனைத்தற
னாகுல நீரபிற.

பு. அந்த விதத்தினாலே தருமத்தைச்செய்பவன் தன் மனசினிடத்திலே குற்றமில்லாதவனாகிறதாகிய அவ்வளவை யுடையதே தருமமாவது அது அல்லாத சொல்லும் வேடமும் பிறரறியச்செய்யும் ஆரவாரத் தன்மையையுடையவை

Whatever is done with a spotless mind is virtue, all else is vain show. *Drew*

That which in spotless purity preserves
The mind, is real virtue, all beside
Is evanescent sound. *Ellis*

---

௩௫ அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
மிழுக்கா வியன்ற தறம்

பு. பொறாமையும் ஐம்புலன்களிலே செல்லுகின்ற இச்சையும் அவை காரணமாகப் பிறர்மேற் செல்லுங்கோபமும் அந்தக் கோபத்தினாலே வருங் கடுஞ்சொல்லும் இந்த நான்கும் தன்னுணடு போக நடந்தது தருமமாம்.

That conduct is virtue which is free from these four things, malice, desire, hunger, and bitter speech *Drew*

No XI

Through the medium of the *Mind* mankind

(Continued from page 128)

VALUE—To hold in respect and estimation.
PRIZE—To value highly
ESTEEM—To regard with reverence, respect or friendship
ATTEND TO—To stretch or bend the mind to a thing
MIND—To have in the mind
REGARD—To fix the mind on as a matter of importance
HEED—To attend to a thing from a principle of caution
NOTICE—To think on that which strikes the senses
REMEMBER—To have in the mind an idea which has been there before
RECOLLECT—To call back ideas to the memory
CREDIT—To rely on the truth of something said or done
INFER—To draw or derive as a fact or consequence
CONCLUDE UPON—To make up the mind to a thing
DETERMINE—To end or settle a point in the mind
DECIDE—To form a definite opinion
PURPOSE—To set before one's mind an object to be reached or accomplished
DESIGN—To form in idea as a scheme
INTEND—To fix the mind on
MEAN—To design with reference to a future act
PROPOSE—To offer or present for consideration
JUDGE—To bring to issue the reasoning deliberations of the mind
DEDUCE—To gather a truth, opinion or proposition from premises
DELIBERATE—To consider and examine the reasons for and against a measure
ADMIRE—To regard with wonder or surprise mingled with approbation
WONDER—To be affected by surprise or admiration
SURPRISE—To throw the mind unto disorder by something suddenly presented to its view
ASTONISH—To confound with some sudden passion
AMAZE—To be so perplexed as not to be able to collect oneself
ASSENT—To express an agreement of the mind to what is alleged.
CONSENT—To yield to what one has the power the right or disposition to withhold.
APPROVE—To admit the propriety of a thing

[To be Continued]

ஆடி மாதம்.

சாலிய ஆடி ௰௪ந்தீ முதல் ஆவணி ௰௪தீ வரைக்கும

E date	தமிழ் தேதி	வாரம்	நட்சத்திரம		திதி.		யோகம்		கரணம	
14	௧	வி	அ	௩௪	ஸ	௩௭ll	சி	௪௭	க	௰l
15	௨	வெ	சி	௩௧	அ	௩௨ll	சி	௪௰ll	வி	௫
16	௩	ச	சு	௨௮lll	ந	௨௮l	சா	௩௪ll	பா	ll
									கவு	௨௭lll
17	௪	ஞா	வி	௨௭ll	த	௨௫	சு	௨௯ll	கர	௨௫
18	௫	தி	அ	௨௭l	ஏ	௨௨lll	சு	௨௫ll	வி	௨௨lll
19	௬	செ	கே	௨௮l	து	௨௪lll	பி	௨௨l	பா	௨௪lll
20	௭	பு	மூ	௯௰ll	தி	௨௨l	மா	௨௰	தை	௨௨l
21	௮	வி	பூ	௩௩lll	ச	௨௩lll	வை	௰௮lll	வ	௨௩lll
22	௯	வெ	உ	௩௮l	0	௨௯ll	வி	௰௮	ப	௨௯ll
23	௰	ச	தி	௪௩lll	பி	௩௰l	பி	௰௮lll	கவு	௩௰l
24	௰௧	ஞா	அ	௪௯lll	து	௩௪lll	ஆ	௨௰	தை	௨ll
25	௰௨	தி	ச	௫௯l	தி	௩௯ll	சவு	௨௧ll	வ	௭
26	௰௩	செ	பூ	௯௰	ச	௪௪l	சோ	௨௩l	ப	௰௨l
27	௰௪	பு	பூ	௨lll	ப	௪௮lll	அ	௨௪	கவு	௰௯ll
28	௰௫	வி	உ	௮ll	ஷ	௫௨ll	சு	௨௫l	க	௨௰lll
29	௰௬	வெ	ரே	௰௩ll	ஸ	௫௫l	தி	௨௫ll	வி	௨௩lll
30	௰௭	ச	அ	௰௭ll	அ	௫௯lll	சு	௨௪lll	பா	௨௯
31	௰௮	ஞா	பர	௨௰	ந	௫௭l	க	௨௩	தை	௨௭
AUG										
1	௰௯	தி	கா	௨௧lll	த	௫௯l	வி	௨௰ll	வ	௨௯lll
2	௨௰	செ	ரோ	௨௨l	ஏ	௫௪	து	௰௯lll	ப	௨௫l
3	௨௧	பு	மி	௨௧ll	து	௫௯lll	வி	௰௨l	கவு	௨௩
4	௨௨	வி	தி	௰௧lll	தி	௪௯ll	அ	௯lll	க	௰௧l
5	௨௩	வெ	பு	௰௭	ச	௪௧lll	வ	lll	வி	௰௪l
							சி	௫௩l		
6	௨௪	ச	பூ	௰௩lll	*	௩௯l	வி	௪௯lll	சது	௯l
7	௨௫	ஞா	ஆ	௰	பி	௩௰l	வ	௩௧l	கி	௩l
									ப	௨௭
8	௨௬	தி	ம	௫lll	து	௨௪l	ப	௩௧lll	கவு	௨௪l
9	௨௭	செ	பூ	௧lll	தி	௰௮	சி	௨௪l	க	௰௮
			உ	௫௯						
10	௨௮	பு	அ	௫௪l	ச	௰௨l	சி	௰௯lll	வி	௰௨l
11	௨௯	வி	சி	௫௧l	ப	௭	சா	௯lll	ப	௭
12	௩௰	வே	சு	௪௮lll	ஷ	௧lll	சு	௩	தை	௧lll
					ஸ	௫௫lll	சு	௫௪	கர	௨௭lll
13	௩௧	ச	வி	௪௭	அ	௫௪l	பி	௫௧lll	வி	௨௫lll
14	௩௨	ஞா	அ	௪௯ll	ந	௫௨l	மா	௪௭l	பா	௨௩l

ஞாயிற்றுக்கிழமைச் சங்கிராந்தி நாடி ௫௫. விநாடி ௰௧ல, சிங்கரவி.